முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பூசலார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

31.12.2018, திங்கட்கிழமை

1. **ஆறுமுக ஞானியே அரங்கா**
**அறம் காத்து வரும் அரசா**
**மாறுதலை உலகினில் செய்ய**
**மாதவசியாக வந்த வள்ளலே**

2. வள்ளலே உன் பெருமை கூறி
வல்லமைபட ஒளி சூட்சும நூலை
சொல்லவே **விளம்பி சிலை திங்கள்**
**சுருதிபடி மூவையோர் திகதி சோம வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 16ம் நாள் 31.12.2018, திங்கட்கிழமை)**

3. வாரமதில் **பூசலார் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
சோரமிலா ஞான பலம் பெற
சுத்தநெறி மக்கள் ஏற்க வேண்டும்

4. வேண்டியே உயிர்க்கொலை தவிர்த்து
வினவிட சாத்வீக குணம்பட
தொண்டு வழி மக்கள் வர வேண்டும்
தொடர்ந்து பிறர் மனம் நோகா வண்ணம்

5. வண்ணமுடன் மனத்தூய்மைபட
வகைபட தானதரும சிந்தை கூட்டி
எண்ணம் வழி குருமார்க்கம் வந்து
எல்லா மக்களும் சன்மார்க்க வழி தொடர

6. தொடரவே மக்களுக்கு மனபலம்
தூயநிலை தயவு நிலை பெருகி
இடரில்லாத ஞான வாழ்க்கையாக
இந்த கலியுக மக்கள் அடைவர்

7. அடைவரே அரங்கன் காட்டும்
அறநெறி ஞானவழி வர
சோடை போகா சிறப்படைவர்
சுபிட்சமான வாழ்வு நலம் பெறுவர்

8. நலம் தரும் மனபலம் தரும்
நன்னூல்களை வாசித்து வர
பலம் பெறும் மனத்தூய்மைபட
பரோபகார சிந்தையும் வளரும்

9. வளரும் சிறப்பறிவு ஞானமும்
வல்லமை கூடும்படி நிலைகள்
வளர்ந்து கலியுகம் தன்னில்
வாழும் காலமே சித்திகள் கிட்டும்

10. கிட்டவே கேட்டது கிடைக்கவல்ல
குருபூசை ஞானிகள் பூசை
தட்டாது உலக மக்கள் செய்து
தவராசன் வழிகளை தொடர

11. தொடரவே ஞானிகள் ஆசியும்
துணையும் கூடி வரும் மக்கள்
இடர்களில்லாத ஞானவாழ்வு பெறுவர்
இயம்பிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பூசலார் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் அவதார ஞானியே அரங்கமகா தேசிகனே உலகின் அறத்தினை அளவிலா தர்மங்கள் செய்து காத்து வரும் தர்மராசனே உலகினில் உலகப்பெருமாற்றம் தனை செய்திடவே வந்துதித்திட்ட மகா தவசியே வள்ளலே அற்புதமான உமது பெருமைகளை உலகறிய கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 16ம் நாள் 31.12.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பூசலார் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பூசலார் நாயனார்.

குற்றமற்ற நல்ஞானம்தனை பெற்றிட வேண்டுமாயின் அரங்கன் வகுத்திட்ட தூயநெறிதனை ஏற்று கடைப்பிடித்திட வேண்டுமப்பா. உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சாத்வீக குணத்துடன் அமைதியாக நடந்து தொண்டுகளை மக்களெல்லாம் செய்து வர வேண்டும்.

தொண்டுகள் செய்வதுடன் பிறர் மனம் நோகாத வண்ணம் நடந்திட வேண்டும். முறையோடு தானதருமங்களை செய்து அவரவருள்ளும் தானதரும சிந்தையை பெருக்கி குருமார்க்கத்தில் ஈடுபாட்டுடன் நடந்து எல்லா மக்களும் சன்மார்க்க வழியினை பின்பற்றி வரவர, மக்களுக்கு மனோபலம் பெருகிடும், தூயநிலை பெருகிடும், தயவு நிலை பெருகிடும். அதனால் இடர்கள் ஏதும் இல்லாத ஞான வாழ்க்கையாக கலியுகத்திலும் மக்கள் அமைதி ஞானவாழ்வை அடைவார்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் அறநெறியினை ஞானவழிக்கு வந்திட வீண்போகாத நல்வாழ்வை வாழ்ந்து சிறப்படைவார்கள், சுபிட்சமான வாழ்வு நலத்தினை பெற்று சிறப்படைவார்கள்.

சர்வ நலங்களையும் தந்தருளும், மனோபலம் தந்தருளும், பக்தி நூல்களை அவரவரும் வாசித்து வருதல் வேண்டுமப்பா. அவ்விதமே பக்தி ஞான நூல்களை வாசிப்போரின் எண்ணங்கள் பலம் பெறும், மனத்தூய்மையுடன் பரோபகார சிந்தையும் வளர்ச்சி அடையும், சிறப்பறிவும் ஞானமும் ஞானிகள் ஆசியினால் வளர்ந்திடும், கலியுகத்தினிலும் வாழும் காலத்திலேயே சித்திகளை பெற்று சிறப்பார்கள்.

கேட்டதெல்லாம் கிடைத்திடும் வல்லமைமிக்க பூஜைகளாம் ஞானிகள் பூஜையாகிய குருபூஜைதனை தட்டாமல் ஏற்று உலக மக்களெல்லாம் செய்து வருவதுடன் ஆறுமுக அரங்கனை பின் தொடர்ந்து நடந்திட ஞானிகளின் ஆசியும் துணையும் பெருகி வரும். மக்களெல்லாம் இடர்கள் இல்லாத ஞானவாழ்வினை பெற்று சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பூசலார் நாயனார்.

–சுபம்–